முருகப்பெருமான் துணை

**மகான் சூலமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.02.2024**, செவ்வாய்கிழமை

1. சாதி மத சடங்குகள் ஒழிய
   சரவணச் சுடரேற்றி அருளுகின்ற
   ஆதி அந்தம் கடந்து நின்று
   ஆறுமுகனார் அவதாரமாக வந்து
2. வந்துமே அற்புதம் நடத்தியே
   வள்ளலாய் அருளுகின்ற ஞானியே
   விந்தைமிகு உன் பெருமை கூறி
   விளம்பிடுவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை சோபகிருது சால் திங்கள்
   அச்சமற முதல் திகதி குசன்வாரம்
   (சோபகிருது வருடம் மாசி மாதம் முதல் நாள், 13.02.2024, செவ்வாய்கிழமை)
   பேசிடுவேன் சூலமுனிவர் யானும்
   பேருலகம் நன்மை காண உரைப்பேன்
4. உரைக்கவே அரங்கன் மார்க்கம்
   உயிர் காக்கும் ஞான மார்க்கம்
   மறைபோற்றும் அரங்கன் உபதேசம்
   மண்ணுலகம் மீட்கும் வேதம்
5. வேதமாக ஏற்று உலகமக்கள்
   வணங்கி அரங்கனிடம் தீட்சை
   ஆதரவு தரும் சக்தியாக ஏற்று
   ஆறுமுகப் பெருமான் வழிபாடு செய்ய
6. செய்யவே செயல்களுக்கு சத்ருஜெயம்
   சிறப்பான மேலவர்கள் துணைபட
   அய்யன் முருகனே இறங்கி அருள
   அனைத்து காரியங்களும் உலகினில்
7. உலகினில் வெற்றி ஆகும்
   உண்மை நிறைந்த ஞானப்படை
   அளவிலாப் பெருகி நின்று
   ஆன்மீக ஞான அரசியல் களம்

8. களம் தனை கண்டு நன்கு
கலியின் அல்லலை வெல்லும்
களமாக ஞானத் தலைமை
கந்தவேலன் ஆசிபட உலகம்

9. உலகம் கண்டடைய நேரும்
உயர்விலா இன பேதம் வழி
கலகம் செய்து ஆளுகின்ற
கழகங்கள் எல்லாம் முடிவுற

10. முடிவுற ஞான ஆட்சியாக
மொழிகுவேன் மேலவர்களும்
நாடிவந்து சூட்சும அருள்புரிய
நல்லுலகமாக ஞான உலகமாக

11. ஆகவே அற்புதம் தன்னை
அகிலம் கண்டடையக் கூடும்
மகான் ஞான தேசிகன் வழி
மக்கள் படை பெருக மாற்றம் காணும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—